பல்லவி ***
மாவீரர் மாதத்தில் பிறக்கின்ற பூவெல்லாம் துயிலில்லம் செல்கின்றதோ
எங்கள் மாவீரர் ஈகத்தில் உயிர்க்கின்ற கனவெல்லாம் களமாடச் செல்கின்றதோ
எங்கள் மாவீரர் ஈகத்தில் உயிர்க்கின்ற கனவெல்லாம் களமாடச் செல்கின்றதோ ....

மாவீரர் மாதத்தில்..... ….எங்கள் மாவீரர் ஈகத்தில்…..

சரணம் 1 ****

காடாண்ட மேடாண்ட கடலாண்ட படைவீரர் எவருக்கும் மரிப்பேயில்லை தலைவீரன் தலைகாத்த தமிழ்மான உயிர்காத்த மறவர்கள் தமிழ்த்தாய் பிள்ளை சிற்பங்கள் சேர்ந்தாலும்.. சிலை செய்ய முடியாது.. சிகரங்கள் ஆண்டாலும்.. இவர்போல இயலாது.. சிற்பங்கள் சேர்ந்தாலும் சிலை செய்ய முடியாது சிகரங்கள் ஆண்டாலும் இவர்போல இயலாது கண்டங்கள் காய்ந்தாலும் இவர் காயம் காயாது கண்பட்டுப் போகாது தமிழீழம் வீழாது....

.... மாவீரர் மாதத்தில்.....

சரணம் 2. *** தீயாலும் நீராலும் யாராலும் அழியாத வரலாறு வசமுள்ளது பகைகொன்று தடைவென்று புயலென்று வியக்கின்ற பெருவீரர் உயிர் வல்லது யுத்தங்கள் தீண்டாமல்.. முடிவொன்று கிடையாது.. ரத்தங்கள் சிந்தாமல்.. வரலாறும் அட ஏது.. யுத்தங்கள் தீண்டாமல் முடிவொன்று கிடையாது ரத்தங்கள் சிந்தாமல் வரலாறும் அட ஏது சத்தங்கள் காணாமல் கரைகொண்ட கடலேது இன்றைக்கோ நாளைக்கோ உருவாகும் தனிநாடு....

....மாவீரர் மாதத்தில்...